பக்கங்கள்: 10 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 ஐப்பசி 04 வியாழக்கிழமை 21.10.2021 கதிர் 350

## இனி இது ரகசியம் அல்ல!

உத்தரப் பிரதேசம் குஷி நகரில்தான் கௌதம புத்தர் இயற்கை எய்தி மகாபரிநிர்வாணம் அடைந்தார். அங்குள்ள விமான நிலையத்தின் திறப்பு விழா நேற்று நடைபெற்ற போது அந்த நிகழ்வில், இலங்கையிலிருந்து பிக்குமார் ☞2

### காத்தான்குடியைச் சேர்ந்த


# தந்தை, மகன், மகள் நீரில் மூழ்கி மரணம்

### வெல்லவாய பகுதியில் சோகம்

மொனராகலை மாவட்டத்தின் வெல்லவாய பொலிஸ் பிரிவில் எல்லவல நீர்வீழ்ச்சியில் குளிப்பதற்காகச் சென்ற தந்தையும், இரண்டு பிள்ளைகளும் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

மூவரும் நேற்று மதியம் எல்லவல நீர்வீழ்ச்சிக்குச் சென்று அருவியைக் காணச் சென்றனர். அங்கு அவர்கள் நீராடியபோதே நீரிழ் மூழ்கி உயிரிழந்தனர் என்று பொலிஸார் கூறினர்.

காத்தான்குடியில் வசிக்கும் 38 வயதான தந்தை, ☞2



# இந்திய மீனவர் நீரில் மூழ்கியே உயிரிழப்பு

### உடல்கூற்றுப் பரிசோதனை அறிக்கையில் தெரிவிப்பு

(ந.லோகதயாளன்)

யாழ். காரைநகர் கடற்பரப்பில் காணாமல்போன இந்திய மீனவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ள நிலையில், அவர் நீரில் மூழ்கியே உயிரிழந்துள்ளார் என்று உடல்கூற்றுப் பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காரைநகர் கடற்பரப்புக்குள் கடந்த 18ஆம் திகதி ஊடுருவிய இந்திய மீன்பிடிப் படகை கடற்படையினர் முற்றுகையிட முயன்ற வேளை கடற்படையினரின் படகு மோதியதில் இந்தியமீனவர்களின்படகுநொருங்கி கடலில் மூழ்கியது. இதன்போது படகில் இருந்த மூவரில் இருவர் மட்டுமே காப்பாற்றப்பட்டனர். ஒருவர் காணாமல்போயிருந்தார்.

இவ்வாறு காணாமல்போன இந்திய மீனவரின் உடல் நேற்றுக் காலை கடற்படையினரால் மீட்கப்பட்டு காங்கேசன்துறை கடற்படைத் தளத்துக்குக் கொண்டுவரப்பட்டது. அங்கு ஊர்காவற்றுறை நீதிவான் மற்றும் தடயவியல் பொலிஸார் ஆகியோர் உடலத்தைப் ☞10

# ஆட்சியை எம்மிடம் ஒப்படைத்துவிட்டு வீடு செல்ல வேண்டும் கோட்டா அரசு

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் வலியுறுத்து



கொழும்பு, ஒக்ரோபர் 21

அனைத்து விடயங்களிலும் படுதோல்வியடைந்துள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு, ஆட்சியை எங்களிடம் ஒப்படைத்துவிட்டு உடனடியாக வீடு செல்ல வேண்டும்.

– இவ்வாறு வலியுறுத்தினார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ. ☞2

## வீதியில் சென்றவர்களிடம் நகைகளை அபகரித்துச் சென்ற நால்வர் சிக்கினர்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணத்தில் வீதியில் சென்றவர்களின் தங்க நகைகளை அபகரித்துச் சென்ற நால்வர் மாவட்ட குற்றத் தடுப்புப் பொலிஸ் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வட்டுக்கோட்டை, அச்சுவேலி, சுன்னாகம் உட்பட 5 இடங்களில் வீதியில் பயணித்தவர்களிடம் தங்க நகைகளை அறுத்து அபகரித்துச் சென்ற தெல்லிப்பழை மற்றும் ஏழாலையைச் சேர்ந்த 20 - 25 வயதுகளையுடைய நான்கு பேரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர். ☞2



## வடக்கில் 639 பாடசாலைகள் இன்று முதல் மீள ஆரம்பம்!

(இ.கலையமுதன்)

வடக்கு மாகாணத்தில் 200 இற்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட 639 ஆரம்பப் பாடசாலைகள் சுகாதார வழிகாட்டலின் கீழ் இன்று ஆரம்பிக்கப்படுகின்றன.

வடக்கு மாகாண கல்வி, சுகாதாரம் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுகளின் ஒன்றிணைந்த ஒத்துழைப்பின் கீழ் ☞2



## மஹிந்தவுடன் வியட்நாம் தூதர் நேற்று பேச்சு




இலங்கைக்கான வியட்நாம் தூதுவர் ஹோா தீ தான் ட்ருக், நேற்று பிற்பகல் ☞10

## இலங்கையில் மீண்டுமொரு கொரோனா அலை அபாயம்!

கொரோனா பரிசோதனைகளைச் செயலிழக்கச் செய்வது மற்றும் எழுமாறான மாதிரிக்கான வழிகளைத் தடுப்பதன் மூலமும், நாட்டுக்குள் வரும் சுற்றுலாப் பயணிகள் மற்றும் விமானப் பயணிகளின் பி.சி.ஆர். பரிசோதனைகளை முழுமையாக நிறுத்துவதன் மூலமும் மீண்டுமொரு கொரோனா அலை ஏற்படும் அபாயம் இருக்கின்றது எனச் சுகாதார நிபுணர்கள் சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:- ☞2



## மரணம் 18 தொற்று 537

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 18 பேர் சாவடைந்துள்ளனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் நேற்றுமுன்தினம் இந்தச் சாவுகள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன என்று அரச தகவல் திணைக்களம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ☞10

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பட்டாளத்துடன் சென்று ராஜபக்ஷ ஆட்சிப்பீடத்தின் இப்போதைய சிற்றரசரான நாமல் ராஜபக்ஷ கலந்து கொண்டார். அச்சமயம் இந்திய பிரதமர் நரேந்திர மோடியையும் அவர் சந்தித்து மும்மொழியில் பதிப்பிக்கப்பட்ட 'பகவத் கீதை' நினைவுப் பரிசில் வழங்கி மகிழ்ந்தார்.

இச்சமயம் ஒரு விடயம் நினைவுக்கு வருகிறது. அரசியலில் 'கிழட்டு நரி' என அழைக்கப்பட்ட ஜே.ஆர். ஜெயவர்த்தனா, குடும்ப வாரிசு அரசியல் மூலம் இளவயதில் பிரதமராக முடி சூடிக் கொண்ட ராஜீவ் காந்தியை தவறாக வழி நடத்தி எல்லாவற்றையும் குழப்பியடிக்க வழி பண்ணினார் – அப்போது. இப்போது விடயம் மாறி நடக்கின்றது. இந்தியாவில் வயதில் முதிர்ந்த பிரதமர் மோடி, இலங்கையில் குடும்ப வாரிசு அரசியல் மூலம் சிற்றரசராகியிருக்கும் நாமலைச் சந்தித்துப் பேசுகின்றார். ராஜீவை ஜே.ஆர். தவறாக வழி நடத்தியமை போலல்லாது, பிரதமர் மோடி சரியாக நாமலுக்கு ஆலோசனை வழங்கி வழி நடத்துவார் என நம்புவோம்.

இப்போதைய குஷிநகர் நிகழ்ச்சிக்கு மூல அழைப்பு பிரதமர் மஹிந்த ராஜ பக்ஷவுக்குத்தான் விடுக்கப்பட்டதாம். உடல் சுகவீனத்தைக் காட்டி அவர் அந்தப் பயணத்தைத் தவிர்த்துக் கொண்டார் என்று கூறப்படுகின்றது. இலங்கைப் பிரதமருக்குப் பதிலாக நாட்டின் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இந்நிகழ்வில் கலந்து கொண்டால் என்ன என்று ஒரு யோசனை பின்னர் முன்வைக்கப்பட்டதாம். இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் மிலிந்த மொறகொடவும் அதை விரும்பினார் என்று கூறப்படுகின்றது. நலிவுற்றிருக்கும் இலங்கை – இந்திய உறவை இத்தகைய மகிழ்ச்சியான ஒரு நிகழ்வின் போது இடம்பெறும் பரஸ்பரம் பரிந்துணர்வுடன் கூடிய சந்திப்பு மூலம் மேம்படுத்தலாம் என்பது மிலிந்த மொறகொடவின் நோக்கம் போலும்.

ஆனால், அத்தகைய சந்திப்புத்தான் உறவை மேலும் சீர்குலைத்து விடும் – தேவையில்லாமல் சந்தித்து, 'பொல்லைக் கொடுத்து அடியை விலைக்கு வாங்கும்' வேலையாகிவிடும் – என ஜனாதிபதி கோட்டாபயவுக்கு சில தரப்புகள் ஆலோசனை கூறியமையை அடுத்தே, இந்த 'ட்ரிப்பை'த் தாம் கைவிட்டு, தமது சிற்றரசரான அமைச்சர் நாமல் ராஜபக்ஷவிடம் அதனைத் தள்ளி விட்டாராம் சித்தப்பா கோட்டாபய ராஜபக்ஷ என்கின்றன உள்வீட்டுத் தகவல்கள்.

ஐந்து வருடங்களுக்கு மேல் நடத்தப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வரும் மாகாண சபைத் தேர்தல்களை விரைந்து நடத்தும் படியும், அரசமைப்பின் 13ஆவது திருத்தம் மூலம் பகிரப்பட்ட அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு முழு அளவில் வழங்கும்படியும் இந்திய அரசு தொடர்ந்து கொழும்புக்கு அழுத்தம் கொடுத்து வருவது தெரிந்ததே. இந்த நெருக்குவாரம் அண்மைக் காலத்தில் தீவிரம் பெற்றிருப்பதாகவும் கூறப்படு கின்றது.

இந்திய வெளிவிவகார அமைச்சர், வெளிவிவகாரச் செயலாளர், கொழும்புக்கான இந்தியத் தூதுவர் என எல்லோருமே இலங்கைப் பிரதிநிதிகளையும் அரசுத் தலைவர்களையும் சந்திக்கும் போது தொடர்ந்து இவ்விடயத்தைக் குறிப்பிட்டு நச்சரிக்கத் தொடங்கியுள்ளனர்.

இந்த அழுத்தம் தீவிரமடைந்திருக்கின்றமையை அடுத்தே, மாகாண சபைத் தேர்தலை நடத்துவது குறித்து அரசு ஆராய்கின்றது, அடுத்த மார்ச்சில் தேர்தலை நடத்த உத்தேசித்திருக்கின்றது என்ற கதைகள் எல்லாம் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவினால் அவிழ்த்து விடப்பட்டு பரப்பப்பட்டன.

இத்தகைய புரளிப் பேச்சுகள், தற்போதைய நிலைமைக்கு – கொஞ்சக் காலத்துக்கு – புதுடில்லியை சமாளிப்பதற்குப் போதுமானது என்பது கொழும்பின் எண்ணம்.

ஆனால், இப்போது மாகாண சபை தேர்தல் முஸ்தீபுகள் போல கொழும்பு காட்டும் நாடகங்கள் காரியமாற்றும் திட்டங்கள் அல்ல என்று புதுடில்லி சரிவரக் கணித்திருப்பதாகவும் கூறப்படுகின்றது.

இந்தப் பின்புலத்தில் உத்தேச மாகாண சபைத் தேர்தலுக்கான திட்டவட்டமான காலவரையறை மற்றும் அரசமைப்பின் 13ஆவது திருத்த ஏற்பாடுகளை முழு அளவில் நடைமுறைப்படுத்துவதற்கான நேர அட்டவணை ஆகியவற்றை தெளிவாக முன்வைக்கும்படி கொழும்புக்கு அழுத்தம் கொடுக்க புதுடில்லி தயாராகி வருகின்றது என்ற சந்தேகம் கொழும்பு ஆட்சிப் பீடத் தலைமைக்கு ஏற்பட்டிருக்கின்றது.

இந்தச் சமயத்தில், இந்தியப் பிரதமரை இலங்கை ஜனாதிபதி கோட்டாய ராஜபக்ஷ நேரடியாகச் சந்தித்துப் பேசும் நிலைமை ஏற்பட்டால், இந்த இரண்டு விடயங்கள் குறித்தும் காலவரையறையுடனான தீர்மானத்தை – உறுதிமொழியை – வழங்குமாறு இந்தியப் பிரதமர் மோடி நேரடியாகவே ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷவுக்கு அழுத்தத்தை தந்து விடலாம் என கொழும்பு அச்சத்துடன் எண்ணியது.

வீணாக, தேவையில்லாமல், இந்தியப் பிரதமரை வலிந்து போய் இச்சமயத்தில் சந்தித்து, இவ்விடயங்களில் விருப்பமின்றியே வாக்குறுதியை வழங்கும் நிலைமைக்குத் தள்ளப்பட்டு, அத்தகைய உறுதிமொழிகளை வழங்கி, ஏன் சிக்கல்பட வேண்டும் என்று ஜனாதிபதி கோட்டாபய தரப்பு சிந்தித்ததாம். அதன் விளைவுதான் குஷிநகர் விசிட்டை குஷியாக நாமல் ராஜபக்ஷவுக்கு ஒப்படைக்கும் முடிவு என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

சோழியன் குடுமி சும்மா ஆடாதல்லவா...?'

– மின்னல் –

---

## வடக்கில் 639...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்படுகின்றன என்று மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்துள்ளார்.

நீண்ட இடைவெளிக்குப்பின் பாடசாலைகள் திறக்கப்பட்டு மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுவது மகிழ்ச்சியளிக்கின்றது.

சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றி மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் ஒத்துழைப்பு வழங்கிய அனைவரும் நன்றி கூறிப் பாராட்டுகின்றேன்.

மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதில் அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்விசார ஊழியர்களது அர்ப்பணிப்பான சேவை பாராட்டுக்குரியது என்றும் வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா மேலும் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு மாகாணத்தில் இன்று ஆரம்பிக்கப்படும் 639 பாடசாலைகளிலும் துப்புரவுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை முன்னெடுக்கத் தயார் நிலையில் உள்ளன. சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றுவதற்குரிய கைகளைத் சுத்தப்படுத்தும் திரவம் உள்ளிட்டவையும் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன என்று வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் செல்லத்துரை உதயகுமார் தெரிவித்தார்.

---

## இலங்கையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொரோனா சமூகமயமாக்கல் தொடர்பில் சுகாதார அமைச்சு இன்னும் தெளிவான அறிக்கையை வெளியிடவில்லை என்றாலும் நாடு சமூகமயமாக்கப்பட்ட தொற்றுநோயை எதிர்கொள்கின்றது.

விஞ்ஞான ரீதியிலான கண்காணிப்பு இல்லாமல் அதைக் கட்டுப்படுத்த முடியாது.

சில நிபுணர்கள் வேண்டுமென்றே கணிப்புகளுக்கான வழிகளைத் தடுத்துள்ளனர். மேலும் கொரோனா அலை ஏற்படும் என்று கணிக்கப்பட்டு வருகின்றது.

மற்றுமோர் அலை ஏற்பட்டால் அத்தகைய நிபுணர்களே அதற்குப் பொறுப்பேற்க வேண்டும் – என்றார்.

## ஆட்சியை எம்மிடம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எதிர்க்கட்சித் தலைவர் நேற்றுப் பிற்பகல் அன்னாசி விவசாயிகளின் பிரச்சினைகளை ஆராய தொம்பே கிரிந்திவெல விவசாயிகளைச் சந்தித்தார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

நாட்டுக்கு பெரும் பலத்தைத் தரும் இளைஞர்கள் நாட்டை விட்டு வெளியேறும் சூழ்நிலையில் உள்ளனர். இளைஞர்களைப் பாஸ்போர்ட் வரிசையில் இழுத்து இளைஞர்களின் வாழ்க்கையுடன் அரசு விளையாடுகின்றது.

நாட்டின் எதிர்காலத்தைப் பொறுப்பேற்க இருக்கும் இளைஞர் சமுதாயம் ஏமாற்றமடைந்து, அவர்களது எதிர்காலம் கேள்விக்குறியானால் இந்த நாடு என்னவாகும்?

எவருக்கும் தீங்கு விளைவிக்காமல் தமது பலத்தால் இந்த நாட்டுக்கு உணவு வழங்கிய விவசாயிகளை, அரசு படுகுழிக்குள் தள்ளியுள்ளது.

விவசாயிகளின் பயிர்கள் சேதமடைந்தால் இழப்பீடு வழங்குவதாக அரசு இன்று பெருமை பேசினாலும், குறைந்தபட்சம் பல மாதங்களாக தெருவில் நிற்கும் அதிபர்கள், ஆசிரியர்களின் சம்பள முரண்பாடுகள் மற்றும் பிரச்சினைகளைத் தீர்க்க நிதியை ஒதுக்கவில்லை.

இப்படியான அரசு, விவசாயிகளின் பிரச்சினைகளுக்குப் பதில்களை வழங்கி அவர்களது பயிர்ச்செய்கைகளுக்கு இழப்பீடுகளை எவ்வாறு வழங்க முடியும்? எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

---

## தந்தை, மகன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

15 வயது மகன் மற்றும் 11 வயது மகள் ஆகியோரே உயிரிழந்தனர்.

நீரில் மூழ்கியவர்களை மீட்க அப்பகுதி இளைஞர்கள் குழு முயன்றும் பயனளிக்கவில்லை.

உயிரிழந்த மூன்று பேரின் உடல்களும் உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பில் வெல்லவாய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## வீதியில் சென்றவர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதேவேளை, சந்தேகநபர்களிடமிருந்து நகைகளைக் கொள்வனவு செய்த சுன்னாகத்தில் உள்ள நகைக்கடை உரிமையாளர் ஒருவர் 6 தங்கப் பவுண் எடையுடைய 5 சங்கிலிகளுடன் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வழிப்பறிக்குப் பயன்படுத்திய இரண்டு மோட்டார் சைக்கிள்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அச்சுவேலி பொலிஸ் பிரிவில் கடந்த 16ஆம் திகதி வீதியில் சென்ற பெண் ஒருவரிடம் தங்கச் சங்கிலி அறுத்து அபகரிக்கப்பட்டது. மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே இந்த வழிப்பறியில் ஈடுபட்டிருந்தனர்.

அன்றைய தினம் இளவாலை மற்றும் சுன்னாகம் பகுதிகளிலும் வீதியில் சென்ற இருவேறு நபர்களிடம் தங்க நகைகள் அபகரிக்கப்பட்டன.

சம்பவங்கள் தொடர்பில் அச்சுவேலி, சுன்னாகம் மற்றும் இளவாலை பொலிஸ் நிலையங்களில் வழங்கப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பில் யாழ்ப்பாணம் பிராந்தியத்துக்குப் பொறுப்பான மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் தலைமைப் பொலிஸ் பரிசோதகர் நிகால் பிரான்ஸிஸ் தலைமையிலான மாவட்ட குற்றத் தடுப்புப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இதன்போது இரண்டு சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டனர். அவர்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் மேலும் இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

மூன்று வழிப்பறிச் சம்பவங்களுடன் வட்டுக்கோட்டையில் ஒருவரிடமும், மருதனார்மடத்தில் வியாபாரி ஒருவரிடமும் தங்க நகைகள் அபகரித்தமையை சந்தேகநபர்கள் ஒத்துக்கொண்டுள்ளனர்.

வழிப்பறியில் கொள்ளையிட்ட நகைகளை சுன்னாகத்தில் உள்ள நகைக்கடை ஒன்றில் சந்தேகநபர்கள் விற்பனை செய்திருந்தனர். அதனால் நகைக்கடை உரிமையாளர் கைதுசெய்யப்பட்டதுடன், சந்தேகநபர்கள் வழங்கிய 5 சங்கிலிகளும் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.




# இந்தியாவின் குஷி நகரில் தரையிறங்கியது இலங்கையிலிருந்து சென்ற முதல் விமானம்






இலங்கையில் இருந்து சென்ற முதல் விமானம் குஷிநகரில் தரையிறங்கியதையடுத்து, இந்தியாவின் புதிய சர்வதேச விமான நிலையத்தை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைத்தார்.

இந்தியாவின் குஷிநகர் சர்வதேச விமான நிலையம் நேற்று (புதன்கிழமை) பிரதமர் நரேந்திர மோடியால் திறந்து வைக்கப்பட்டது.

இதற்கான முதலாவது விமானம் இலங்கையிலிருந்து நேற்று அதிகாலை 5.20 மணியளவில் புறப்பட்டுச் சென்றது.

ஸ்ரீ லங்கன் விமான சேவைக்குச் சொந்தமான யு.எல் 1147 என்ற விமானமே இவ்வாறு நாட்டிலிருந்து புறப்பட்டுச் சென்றது.

இந்த விமானத்தில், அஸ்கீரிய பீடத்தின் அனுநாயக்கர் வெண்டருவே உபாலி தேரர் உள்ளிட்ட மஹா சங்கத்தின் 95 பௌத்த தேரர்கள் சென்றனர்.

அவர்களுடன் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்தப் பயணத்தில் பங்கேற்றுள்ளனர் எனக் குறிப்பிடப்படுகின்றது.

## கறுவா ஒரு கிலோகிராம் 3 ஆயிரத்து 400 ரூபா!

கறுவா, மிளகு, சாதிக்காய், கராம்பு மற்றும் கோப்பி உள்ளிட்ட பிரதான ஏற்றுமதிப் பயிர்களின் விலையும் உள்நாட்டு சந்தையில் அதிகரித்துள்ளன.

அதற்கமைய, உள்நாட்டுச் சந்தையில் 500 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வந்த மிளகு கிலோவொன்றின் விலை தற்போது 900 ரூபாவாக அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதுதவிர, கறுவா ஒரு கிலோகிராம் 3 ஆயிரத்து 400 ரூபாவாகவும் கராம்பு ஒரு கிலோகிராம் ஆயிரத்து 400 ரூபாவாகவும் அதிகரித்துள்ளன.

அத்துடன், ஒரு கிலோகிராம் கோப்பி ஆயிரத்து 250 ரூபாவாக அதிகரித்துள்ளதோடு, ஒரு கிலோ பாக்கு ஆயிரம் ரூபாவாக அதிகரித்துள்ளதாக ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## மட்டக்களப்பு வாழைச்சேனையில் ஓட்டோ தீயில் எரிந்து நாசம்!

மட்டக்களப்பு வாழைச்சேனை பிரதேசத்தில் வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஓட்டோ ஒன்றுக்கு இனம் தெரியாதோரால் தீ வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று (வியாழக்கிழமை) அதிகாலை இடம்பெற்றுள்ளது.

தீ வைக்கப்பட்டதை அடுத்து ஓட்டோ முற்றாக எரிந்து சேதமடைந்துள்ளதுடன் வீட்டின் ஒருபகுதியும் சேதமடைந்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள மீறாவோடை 4 ஆம் பிரிவு கூட்டுறவு சங்க வீதியிலுள்ள வீடு ஒன்றின் உரிமையாளர் ஓட்டோவில் வாடகைக்கு சென்று சம்பவதினமான நேற்று அதிகாலை 2 மணியளவில் வீடு திரும்பிய பின்னர் ஓட்டோவை வீட்டின் முன்பகுதியில் நிறுத்திவிட்டு நித்திரைக்குச் சென்றுள்ளார்.

இந்த நிலையில் அதிகாலை 4 மணியளவில் சத்தம் கேட்டு வீட்டின் கதவைதிறந்து வெளியேவந்தபோது நிறுத்திவைக்கப்பட்டிருந்த ஓட்டோ தீயில் எரிந்து கொண்டிருந்ததையடுத்து தண்ணீரை ஊற்றி தீயைக் கட்டுப்பாட்டிற்கு கொண்டுவந்ததாகவும் இருந்தபோதும் ஓட்டோ முற்றாக எரிந்து சேதமடைந்துள்ளதுடன் வீட்டின் முன்பகுதி ஜன்னல் கண்ணாடிகள் உடைந்து சேதமடைந்துள்ளன எனப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. இதேவேளை வீட்டின் முன்பகுதி சுவரில் ஒட்டப்பட்டிருந்த கடிதம் ஒன்றை பொலிஸார் மீட்டுள்ளதுடன் இது இரு குடும்பங்களுக்குள்ளே ஏற்பட்ட சண்டை காரணமாக இடம்பெற்று இருக்கலாம் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.


## மும்மொழிகளில் அமைந்த பகவத் கீதை நாமலால் இந்தியப் பிரதமருக்கு வழங்கல்!

கௌதம புத்தர் பரிநிர்வாணமடைந்த உத்தரபிரதேசத்தில் உள்ள குஷிநகர் சர்வதேச விமான நிலையத்தை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நேற்று (புதன்கிழமை) திறந்து வைத்தார்.

இந்த விமான நிலையம் பௌத்த மதத்தவரது ஆன்மீக சுற்றுலாவை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

புராதன நகரமான குஷிநகர் கௌதம புத்தரின் இறுதி ஓய்வு இடமாகும், அங்கு அவர் இறந்த பிறகு மஹா பரிநிர்வாணம் அடைந்தார்.

இந்த நிகழ்வின் விசேட அம்சமாக, இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையே 2,500 வருடங்களாகக் காணப்படும் நட்புறவின் அடையாளமாக, பாரததேசம் இந்த உலகிற்குத் தந்த மிகப்புனிதமானநூலானபகவத்கீதைவெளியீட்டின் முதற் பிரதி, இலங்கையின் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் நாமல் ராஜபக்ஷவால் இந்தியப் பிரதமர் மோடிக்கு வழங்கப்பட்டு வெளியீடு செய்து வைக்கப்பட்டது. அது இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பரஸ்பர உறவை மேலும் வளர்க்கும் செயலாகும்.



இலங்கைத் திருநாட்டின் பிரதமர், மஹிந்த ராஜபக்ஷவின் அறிவுறுத்தலுக்கு அமைவாக, புத்தசாசன சமய, மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் கீழ் இயங்கும் இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் பகவத்கீதை என்னும் இந்நூல் பதிப்பிக்கப்பட்டது.

பாரத தேசம் இந்த உலகிற்குத் தந்த மிகப் புனிதமான நூல் பகவத் கீதை. அந்தப் பெருமை மிகு நூலை இலங்கையில் வாழ்கின்ற இந்துக்கள் மட்டுமல்லாது, சகல மதத்தவர்களும் அறிந்து கொள்ளவேண்டும் என்ற நோக்கில் உருவாக்கப்பட்டதே இந்த நூல்.

இலங்கைத்திருநாட்டில்வாழுகின்றஅனைத்து மதத்தவர்களும் அறியும் வகையில் பகவத்கீதையில் அமைந்த சமஸ்கிருத சுலோகங்களை, சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் அறியும் வண்ணம் இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது.

## பாடசாலைகளை மீள ஆரம்பிப்பதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன





கொரோனா சூழ்நிலை காரணமாக கடந்த சில மாதங்களாக கல்வி நடவடிக்கைகளை இடைநிறுத்தியிருந்த பாடசாலைகளை மீளவும் ஆரம்பிக்குமாறு அரசாங்கம் அறிவித்துள்ள நிலையில், பாடசாலைகளை இன்று வியாழக்கிழமை முதல் கட்டம் கட்டமாக ஆரம்பிப்பதற்கான செயற்பாடுகளை மாவட்ட ரீதியில் முன்னெடுத்துவருகின்றனர்.

அந்த வகையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 200 இற்கு குறைவான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளை இன்று ஆரம்பிப்பதற்கான செயற்பாடுகளை மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கல்வி திணைக்கள அதிகாரிகள் வலயங்கள் ரீதியாக முன்னெடுப்புக்களை மேற்கொண்டு வருகின்றனர்.

மட்டக்களப்பு வலயக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ள பாடசாலைகளை துப்புரவு செய்யும் பணிகள் இடம்பெற்றுவந்த நிலையில், மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட நாவலடி நாமகள் வித்தியாலயத்தின் (திராய்மடு) துப்புரவு பணிகள் நேற்று இடம்பெற்றன.

இந்தச் செயற்பாட்டைப் பார்வையிடுவதற்காக மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் மேற்படி வித்தியாலயத்துக்கு வருகை தந்திருந்தமையுடன் துப்புரவுப் பணிச் செயற்பாட்டையும் ஆரம்பித்து வைத்தார்.

அத்தோடு பாடசாலையின் விளையாட்டு மைதானத்தின் குறைபாடுகள் மற்றும் பாடசாலைக்கான விடுதியில் உள்ள குறைபாடுகள் தொடர்பில் கலந்துரையாடியதுடன், அதற்கான தீர்வுகளை பெறும் வழிகள் தொடர்பாக மாவட்ட அரசாங்க அதிபர் ஆலோசனைகளையும் வழங்கியிருந்தார்.

குறித்த சிரமதானப் பணியை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி என்.பிள்ளைநாயகம், மட்டக்களப்பு வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி சுஜாத்தா குலேந்திரகுமார், மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வீ.வாசுதேவன், உதவிப் பிரதேச செயலாளர் பொறியியலாளர் ஜீ.அருணன் உள்ளிட்ட ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

*Jaffna College Institute of Technology*
***Calls** for the following courses*

**Computer Certificate Courses** *( 3 – 4 months Part time)*

- Certificate in MS OFFICE – (MS Word, Excel, Access & PowerPoint)
- Certificate in Graphic Designer – (PageMaker,PhotoShop & CorelDraw)
- Computer Hardware Technician
- Web Designing(HTML, CSS, JAVA Script, PHP, MYSQL)
- Java, C++ Programming

**Commencement in November 2021**
**At Our Jaffna Centre along**
**(Jaffna College Undergraduate dept. Building)**
**464 Hospital Road**
**Jaffna.**
**For further details contact**
**Tel no: 0212250975/0212223382**
**Email: ejcit@sltnet.lk.**

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## ஆசிரியர்களை மதியுங்கள்!

**முள்ளில் விழுந்த சேலையைக் கவனமாகத்தான் – நுட்பத்துடன்தான் – எடுக்க வேண்டும். 'எடுத்தோம், கவிழ்த்தோம்' என்று விடயத்தைக் கையாண்டால் சேலை கிழிந்துதான் போகும்.**

**நாட்டில் சில பிரச்சினைகளை – குறிப்பாகத் தொழிற்சங்கப் பிரச்சினைகளை இப்படிக் கவனமாகத்தான் கையாள வேண்டும். அவசரப்பட்டு அதிகாரத்தை – மேலாண்மையை – வலுப் பிரயோகத்தை – மேற்கொண்டால் விவகாரம் மிகச் சிக்கலாகிப் போய்விடும்.**

**அரசியலில் அடிப்படை அரிச்சுவடிப் பாடங்களைக் கற்றுத் தேர்ந்து மேலலெழுந்து வராதவர், நேரடியாக நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக வந்து விட்டமையாலோ என்னவோ, இத்தகைய அடிப்படை அரசியல் விவகாரங்களில் கூட இந்த ஆட்சித் தரப்பு தவறிழைத்து வருவது கண்கூடாக வெளிப்படுகின்றது.**

**கோட்டாபய ராஜபக்ஷ நேரடியாக ஜனாதிபதித் தேர்தலுக்கு வந்தவர். ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட வேட்புமனுத் தாக்கல் செய்த சமயம்தான் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அங்கத்தவராகவே சேர்ந்தவர். அதற்கு முன்னர் ஒரு கிராம சபைத் தேர்தலிலோ அல்லது உள்ளூராட்சி சபைத் தேர்தலிலோ கூடப் போட்டியிட்டவரல்லர். ஏதேனும் கட்சிகளில் சாதாரண அங்கத்துவராகத் தன்னும் இருந்தவருமல்லர். குறிப்பாகச் சொன்னால் ஒரு தேர்ந்த அரசியல்வாதியேயல்லர்.**

**இராணுவத்தில் அதிகாரியாகப் பணியாற்றியவர். பின்னர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராகவிருந்து யுத்தத்தை முன்னெடுத்தவர். அரசியல், தேர்தல், ஜனநாயக முறைமைகள் போன்றவற்றுடன் பின்னிப் பிணைந்தவரல்லர்.**

**அரசியல் பற்றிப் பேசினால் இப்போதும் கூட, "அது குறித்து எனக்கு அதிகம் பரிச்சயமில்லை. அதில் தேர்ந்தவர் எனது மூத்த சகோதரர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷதான். அவருடன் அது குறித்துப் பேசுங்கள்!" – என்ற சாரப்பட பதிலளிப்பார் ஜனாதிபதி கோட்டாய ராஜபக்ஷ.**

**"நான் ஒரு அரச நிர்வாகி. அதனையே நான் செய்கிறேன், செய்வேன். அரசியலை அல்ல" – என்ற சாரப்பட அவரின் பிரதிபலிப்பு இப்போதும் உள்ளது. பௌத்த, சிங்களப் பேரினவாதத்தை நிலைநிறுத்துவதில் மட்டும் இந்த அரச நிர்வாகி, பழுத்த அரசியல்வாதிகளையும் தாண்டி நடக்கின்றார் என்பது வேறு விடயம்.**

**அரச நிர்வாகம் சார்ந்த அரசியல் விடயங்களில் அவரது அனுபவக் குறைவு – பட்டறிவுப் பற்றாக்குறை – அவ்வப்போது வெளிப்படையாகத் தோற்றாமல் இல்லை.**

**அதிபர், ஆசிரியர்கள் தொழிற்சங்கப் போராட்டங்களை அவரின் அரச நிர்வாகம் கையாளும் விதத்தைப் பார்க்கும்போது அந்தப் பின்னடைவு துலாம்பரமாகத் தெரிகின்றது.**

**சம்பள வேறுபாட்டால் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கும் ஆசிரியர்கள் பக்கத்திலும் – அவர்களின் கோரிக்கைகளிலும் – தெளிவான நியாயம் உண்டு. பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருக்கும் அரசுக்கு உடனடியாக ஆசிரியர்கள் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாத இக்கட்டு உள்ளது என்பதும் புரிந்து கொள்ளத்தக்கதே.**

**எனினும் ஒன்றரை வருடங்களாகக் குழம்பிப் போயிருக்கும் மாணவர்களின் வகுப்பறைக் கல்வி அல்லது கற்றல் – கற்பித்தல் செயற்பாடு, இவை எல்லாவற்றையும் விட முக்கியமானது.**

**இந்த ஒன்றரை வருட காலமும் வேலையில்லாமலேயே வேதனம் பெற்றோம் என்ற குற்ற உணர்வும், குழம்பிப் போயிருக்கும் மாணவர்களின் கல்வியைக் குறுகிய காலத்தில் சீர்ப்படுத்தி மேம்படுத்த வேண்டும் என்ற பொறுப்புணர்வும் ஆசிரியர்களுக்குத் தாராளமாக உண்டு. அதனால்தான் இவ்வளவு எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு மத்தியிலும் தமது நிபந்தனைகளை விட்டுக் கொடுத்து, வரும் திங்களன்று பணிக்குத் திரும்ப பல ஆசிரிய தொழிற்சங்கங்களும் இணங்கியிருக்கின்றன.**

**அதற்கிடையில், இன்று கட்டாயம் கடமைக்குத் திரும்புங்கள் என்று ஆட்சித் தலைமை கெடுபிடி பண்ணுவது – மல்லுக்கட்டுவது – அழிச்சாட்டியம் பண்ணுவது – வீண் குழப்பங்களுக்கே வழி செய்யும்.**

**இந்தக் கெடுபிடித்தனம், இத்தகைய விடயங்களைக் கையாள்வதில் அரசியல் அனுபவமின்மையையே – முதிர்ச்சியின்மையையே – வெளிப்படுத்தி நிற்கின்றது.**

# முஸ்லிம் சமூகத்தின் பாதுகாப்பை உறுதி செய்துள்ளது அரசாங்கம்!

## பேச்சாளர் ரமேஷ் பத்திரண கூறுகிறார்



இலங்கையில் உள்ள முஸ்லிம் சமூகத்தின் பாதுகாப்பை அரசாங்கம் இன்று உறுதி செய்துள்ளது.

அனைத்து இலங்கையர்களும் ஒழுக்கமான வாழ்க்கை வாழ்வதை உறுதி செய்ய அரசுக்கு ஆணை வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சரவை இணை செய்தித் தொடர்பாளர் டாக்டர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

ஈஸ்டர் தாக்குதலைத் தொடர்ந்து சில சம்பவங்கள் பதிவாகியுள்ள நிலையில், அதிகாரிகளால் நடத்தப்பட்ட குண்டுவெடிப்பு தொடர்பான விசாரணைகள் எந்த குறிப்பிட்ட சமூகத்தையும் குறிவைக்கவில்லை என்று அவர் கூறினார்.

தாங்கள் பொறுப்புள்ள அரசு என்றும் முஸ்லிம்கள், தமிழர்கள் மற்றும் சிங்களவர்கள் உட்பட நாட்டின் அனைத்து சமூகங்களின் நலன்களையும் தாங்கள் கவனிப்போம் என்ற உண்மையை மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன் எனவும் அவர் குறிப்பிட்டார்.

# ஒப்பந்தம் அடுத்த வாரம் கைச்சாத்தாகிறதாம் டீசலுக்கு 35, பெற்றோலுக்கு 18 ரூபா இழப்பு

## என்கின்றார் அமைச்சர் கம்மன்பில

360 கோடி டொலர் கடனை ஓமானிடம் இருந்து பெற்றுக் கொள்வதற்கான ஒப்பந்தம் அடுத்த வாரம் கைச்சாத்திடப்படும் என எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

5 வருடத்துக்கு ஒருமுறை என்ற அடிப்படையில் 20 வருட காலத்திற்குள் மீண்டும் அக்கடனை செலுத்தும் வகையில் இந்த ஒப்பந்தம் அமையும் என அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

உலகளாவில் எரிபொருள் விலை கடுமையாக அதிகரித்துள்ள நிலையில் நாட்டுக்கு தேவையான எரிபொருளை பெற்றுக்கொள்வதற்காக இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதாக அமைச்சர் உதய கம்மன்பில கூறி



னார்.

தற்போது இலங்கை பெற்றோலிய கூட்டுத் தாபனம் ஒரு லீற்றர் டீசலுக்கு 35 ரூபா மற்றும் ஒரு லீற்றர் பெற்றோலுக்கு 18 ரூபா இழப்பை சந்தித்து வருகிறது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

# சரவணபாபா அறக்கட்டளையால் முல்லைத்தீவில் வீடு கையளிப்பு



வன்னியின் முல்லைத்தீவு மாவட்டத்தின் முத்தையன் கட்டு கிராமத்தில் பெரும் கஷ்டங்களை அனுபவித்து வரும் பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கான நிரந்தர வீடு அமைத்து கொடுக்கும் திட்டத்தின் கீழ் பிரித்தானிய - ஓம் சரவணபாபா அறக்கட்டளையினரால் அமைக்கப்பட்ட வீடு ஒன்று கடந்த திங்கட்கிழமை பயனாளிக்கு கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வுக்கு வடக்கின் முன்னாள் ஆளுநரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேன் ராகவன், ஒட்டிசுட்டான் உதவி பிரதேச செயலாளர் ரமேஷ், முத்தையன்கட்டு கிராம சேவையாளர் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்.

# நனோ நைட்ரஜன் திரவ உரத்தின் முதல் தொகுதி நாட்டிற்கு வந்தது

நனோ நைட்ரஜன் திரவ உரத்தின் முதல் தொகுதி நாட்டிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

அதற்கமைய ஒரு லட்சம் லீற்றர் நனோ நைட்ரஜன் திரவ உரம் இந்தியாவிலிருந்து விமானத்தின் ஊடாக கட்டுநாயக்க விமான நிலையத்துக்குக் கொண்டு வரப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதனை கமநல சேவை மையங்களினூடாக நேற்று முதல் விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

அதேநேரம், மிகுதி 31 லட்சம் லீற்றர் நனோ நைட்ரஜன் திரவ உரம் எதிர்வரும் நாள்களில் நாட்டுக்குக் கொண்டுவரப்படவுள்ளது.

நனோ நைட்ரஜன் மூலத்துடன் கூடிய விசேட திரவ உரத்தை இறக்குமதி செய்ய அமைச்சரவை அண்மையில் அனுமதி வழங்கியிருந்தது.

9 லட்சம் ஹெக்டேயருக்கு தேவையான திரவு உரத்தைக் கொள்வனவு செய்வதற்கே இவ்வாறு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து, நைட்ரஜன் மூலத்துடன் கூடிய 31 லட்சம் லீற்றர் விசேட திரவ உரத்தை இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யவும் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இதன் அடிப்படையில் அதன் முதல் தொகுதியாக ஒரு லட்சம் லீற்றர் விசேட திரவ உரம் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

# 12 மாவட்டத்தில் 72 மத்திய நிலையங்களில் கொரோனா தடுப்பூசிகள் செலுத்தப்படுகின்றன

நாடளாவிய ரீதியில் நேற்றும் (புதன்கிழமை) தடுப்பூசி செலுத்தும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

அதனடிப்படையில், நாட்டின் 12 மாவட்டங்களிலுள்ள 72 மத்திய நிலையங்களில் நேற்று கொரோனாத் தடுப்பூசி செலுத்தப்பட்டன என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

காலைக்கதிர்
Kalaikkathir

# தமிழ்த் தேசியம் தடம் மாறலாம் ஆனால் தடம்புரளக் கூடாதாம்!

## கூறுகின்றார் வியாழேந்திரன்



எமது தமிழ் தலைமைகளால் பிரச்சினையை மாத்திரம் தான் சொல்ல முடியும். 72 வருடங்கள் அல்ல 700 வருடங்கள் சென்றாலும் எமது மக்களுக்கான பிரச்சினைக்குத் தீர்வை பெற்றுக்கொடுக்க இவர்களால் முடியாது என இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கை பிரகடனத்திற்கு அமைவாக 'ஒரு லட்சம் கிலோ மீற்றர் வீதிகளை புனரமைக்கும் வேலைத்திட்டத்தினூடாக ஆயித்தியமலை மணிபுரம் தணிகாச்சலம் வீதியை கொங்கிறீட் வீதியாக புனரமைக்கும் வேலைத்திட்டம் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரி வித்துள்ளார்.

அவர் தொடர்ந்து அங்கு கருத்துத் தெரிவிக்கையில் –

கிழக்கு மாகாணத்தில் ஒரு வலிமையான அரசியல் கட்டமைப்பை ஏற்படுத்தி கிழக்குத் தமிழ் மக்களின் இருப்பை உறுதிப்படுத்துகின்ற அரசியல் பயணத்தில் தமிழ் மக்களுக்கு இருக்கின்ற உரிமை சார்ந்த விடயங்களில் நாங்கள் சாணக்கியமாக ராஜதந்திரமாக நகர்த்துவோம். அபிவிருத்திசார்ந்தவிடயங்களையும் தொடர்ந்தும் முன்னெடுப்போம்.

எமது தமிழ் தலைமைகளால் பிரச்சினையை மாத்திரம் தான் சொல்ல முடியும்.72 வருடங்கள் அல்ல 700 வருடங்கள் சென்றாலும் எமது மக்களுக்கான பிரச்சினைக்குதீர்வைபெற்றுக் கொடுக்க இவர்களால் முடியாது. ஆண்டாண்டு காலமாய் அதே பொய் அதே பித்தலாட்டம்.எனக்கு வாக்களித்த அந்த 34 ஆயிரம் மக்களால் தான் இந்த மாகாணத்துக்கு இந்த மாவட்டத்துக்கு ஒட்டுமொத்த மக்களுக்கும் இன்று நல்லது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.

அதனால் தான் அந்த 34 ஆயிரம் பேரையும் என்னால் மறக்க முடியாது. அந்த 34 ஆயிரம் பேர் இல்லாவிட்டால் இந்த மாகாணத்துக்கு ஓர் இராஜாங்க அமைச்சரை, உங்கள் முன்னால் சதாசிவம் வியாழேந்திரன் இல்லை. தமிழ்த் தேசியம் என்பது தடம் மாறலாம்.

தமிழ் தேசியம் தடம்புரளக் கூடாது. இதுதான் யதார்த்தம் 1983 இற்கு முதல் அஹிம்சை வழி சாத்வீகப் போராட்டம் அதுதான் தமிழ்த் தேசியம். 1983 முதல் ஆயுதம் தூக்காத போராட்டம் அதுதான் தமிழ் தேசியத்தின் பாதை.

1983 ஆம் ஆண்டுக்குப் பிற்பாடு விடுதலைப் புலிகள் ஆயுதம் தூக்கிப் போராடினார்கள். அஹிம்சையில் இருந்து ஆயுதப்போராட்டம். 2009 மே மாதத்துக்கு பிறகு ஜனநாயகமயப்படுத்தப்பட்ட போராட்டமாக மாறியது.

வரலாற்றில் தமிழ்த் தேசியம் தடம் மாறி வந்திருக்கின்றது.

ஆனால் தடம்புரளக் கூடாது காலம். சூழ்நிலைக்கேற்றவாறு நாம் சிந்திக்க வேண்டும். விடிய விடிய போராடினாலும் அம்பாறையில் ஒரு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினரைப் பெற்றுக்கொள்ள முடியாது.

இன்று முஸ்லிம் சமூகம் அங்கு நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களை பெற்றிருக்கின்றார்கள்.அதேபோல் விடிய விடிய முயற்சித்தாலும் ஒரு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினரை மாத்திரமே திருகோணமலையில் எம்மால் பெற்றுக் கொள்ள முடியும்.

அதேபோன்று இன்னும் பத்து வருடங்களின் பின்பு அந்த ஒருவர் கூட வர முடியுமா என்று சந்தேகம் இருக்கின்றது. எங்கே போய்க்கொண்டிருக்கிறது இந்த மாகாணம். நான் இனவாதம் பேசவில்லை என் சார்ந்த சமூகத்தின் நிலைமை தொடர்பிலேயே பேசிக் கொண்டிருக்கிறேன். – என்றும் தெரி வித்துள்ளார்.

## கைக்குண்டுடன் முன்னாள் இராணுவ வீரர் பூவரசன்தீவில் கைது செய்யப்பட்டுள்ளார்

கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பூவரசன் தீவு பகுதியில் கைக்குண்டுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் அதே பகுதியைச் சேர்ந்த முன்னாள் இராணுவ வீரரான ராசிக் பரீட் பர்ஹான் (வயது – 29) எனவும் தெரியவருகின்றது.

கணவனுக்கும் மனைவிக்குமிடையில் குடும்பத் தகராறு ஏற்பட்டுள்ள நிலையில் கணவரான முன்னாள் இராணுவ வீரர் தனது மனைவியை கைக்குண்டை காட்டி பயமுறுத்தினார் எனக் கிண்ணியா பொலிஸ் நிலையத்துக்குத் தொலைபேசி மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் கைக்குண்டைத் தமது கண்காணிப்பின் கீழ் எடுத்துள்ளனர் எனவும், கைக்குண்டு இருக்கும் இடத்துக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் நீதிமன்ற அனுமதியைப் பெற உள்ளதாகவும், தீவிர விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன எனவும் கிண்ணியா பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதன்போது, கைது செய்யப்பட்ட சந்தேகநபர் கிண்ணியா பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுவிசாரணைகள் இடம்பெற்று வருகின்றன எனவும் கிண்ணியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## 'திருட்டு ஒப்பந்தத்தை இரத்துச் செய்க' பரவலாக ஒட்டப்பட்டுள்ள சுவரொட்டிகள்

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பிரதேசங்களிலும் மின்சாரம், எண்ணெய் என்பனவற்றின் சுயாதிபத்திதுவத்தை காட்டிக்கொடுக்கும் திருட்டு ஒப்பந்தத்தை ரத்துச் செய்யுமாறு குறிப்பிட்டு தொழிலாளர் மத்திய நிலையத்தால் பரவலாக சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்தோடு முன்னிலை சோசலிசக் கட்சியாலும் அமெரிக்கா, சீனா, இந்திய மரணப்பொறியில் மக்களை சிக்கவைக்கும் ஏகாதிபத்திய ஆட்சிக்கு எதிராவோம் என்றும் எழுதப்பட்டுள்ள சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு கந்தளாய், திருகோணமலை மற்றும் தம்பலகாமம் போன்ற பிர தேசங்களின் சந்திகளில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை,சிங்கள மற்றும் தமிழ் மொழிகளிலும் அச்சிடப்பட்டு சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளமையைக் காணக் கூடியதாக உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



## 20 கிலோ 215 கிராம் கேரளக் கஞ்சா பொதியுடன் மன்னாரில் ஒருவர் கைது



மன்னார் – பேசாலை பொலிஸ் பிரிவில் உள்ள பேசாலை 8 ஆம் வட்டாரப் பகுதியில், சுமார் 20 கிலோ 215 கிராம் கேரள கஞ்சா பொதிகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பேசாலை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பண்டுள்ளவீரசிங்கவின் பணிப்பில், மன்னார் மாவட்ட குற்றப்புலனாய்வு பிரிவு பொறுப்பதிகாரி குமார பள்ளேவள மற்றும் இன்ஸ்பெக்டர் ராமநாயக்க ஆகியோர் தலைமையிலான பொலிஸார் விரைந்து செயற்பட்டுமேற்படிபகுதிக் குச்சென்று குறித்த கேரள கஞ்சா பொதிகளை மீட்டுள்ளதோடு, சந்தேக நபரான பேசாலை 8 ஆம் வட்டாரத் தைச் சேர்ந்த 45 வயதுடைய பெண் ஒருவரையும் கைது செய்துள்ளனர்.

மேற்படி கைது செய்யப்பட்ட நபர் மற்றும் கைப்பற்றப்பட்ட கஞ்சா, மேலதிக விசாரணையின் பின் மன்னார் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்த பேசாலை பொலிஸார் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மத்திய மாகாண முதல்வர் பதவிக்கு போட்டியிடுகிறார் கிரியெல்லவின் மகள்



மத்திய மாகாண சபை முதலமைச்சர் வேட்பாளர் பதவிக்கு, ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்லவின் மகள் சமிந்திராணி கிரியெல்ல பரிந்துரைக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு சிங்கள ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் மத்திய மாகாண சபை முதலமைச்சர் பதவிக்கு இலங்கையில் பல முக்கிய அரசியல் கட்சிகள் போட்டிக்கு பல புதிய முகங்களைக் கொண்டு வரத் திட்டமிட்டுள்ளன. மத்திய மாகாண சபைத் தேர்தலில் பிரபல அரசியல் காட்சிகள் பல போட்டியிடவுள்ளன. இது மத்திய மாகாண சபை தேர்தல் வரலாற்றிலேயே நாட்டின் அரசியலில் ஒரு முன்னோடியாக அமையவுள்ளள்ளமை தெரியவந்துள்ளது.

இந்நிலையிலேயே, மத்திய மாகாண சபைக்கான முதலமைச்சர் வேட்பாளர் பதவிக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்லவின் மகள் சமிந்த்ராணி கிரியெல்ல பரிந்து ரைக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

## அங்கம் - 167

**419. புலம்பெயர் அமைப்புக்கள் சில வெளிநாட்டு மனித உரிமைகள் மன்றங்களோடு சேர்ந்து நடவடிக்கைகளை எடுக்கின்றனவே?**

சில முனைப்புக்கள் உண்டு. ஆயினும் அவை கூட நாட்டிலிருந்து வரும் தகவல்களிலும் விடயங்களிலும்தான் தங்கியிருக்கின்றன. உண்மையைச் சொல்வதானால் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு, சர்வதேச மன்னிப்புச் சபை போன்ற காத்திரமான அமைப் புக்கள் முன்வைக்கும் ஆதாரங்களாலும், தகவல்களாலும் ஐ.நா. தமக்கென வைத்துக் கொள்ளும் தகவல் தளங்களினாலுமே இவை முன்னேறுகின்றன.

அவர்கள் முன்னர் கோட்டாவைக் கைது செய்வதற்காக, நடவடிக்கை எடுத்தார்கள். பின்னர் இராணுவ பின்னணியிலிருந்து ஸ்ரீலங்காவின் பிரதிநிதிகளாக நியமிக்கப்பட்டு மேல் நாடுகளுக்கு அனுப்பப் பட்டவர்களுக்கு எதிராக குற்றப் பத்திரங்கள் கொடுத்து அவர்களது நியமனங்களை எதிர்த்தார்கள். இப்பொழுது கூட இராணுவத் தளபதி சவேந்திர சில்வாராவுக்கு பிரித்தானியா விசா வழங்குவதற்கு எதிராக ஜஸ்மின் சூக்காவின் அமைப்போடு சேர்ந்து சமர்ப்பணங்கள் பிரித்தானியாவில் செய்கிறார்கள்.

இவை அந்தந்த அதிகாரிகளுக்கு இடைஞ்சல் தந்து, அந்த அழுத்தங்கள் ஸ்ரீலங்கா அரசினாலும் உணரப் படலாம். இவை பிரச்சார வெளிப்பாடுகளாக இனப்படுகொலைக்கு ஆதரவு நல்கும். ஆனால் அவை கணக்கெடுக்கப்பட, அவை மன்றின் குழுக்களுக்குச் சமர்ப்பிக்கப்பட்டு ஆவணப்படுத்தப்பட வேண்டும். அனேக சமயங்களில் நாம் கூடிக் கலைந்து விடுகிறோம். அவ்வளவே.

**420.போரின் பின் மஹிந்தா லண்டனிற்குப் போனபோது அவரைப் பொது அழைப்புகளில் - பல்கலைக்கழகத்திலும் கூட - பேச விடாமல் தமிழ் மக்கள் ஆர்ப்பாட்டம் செய்து திருப்பி அனுப்பியவை போன்றவை தாக்கம் தருமா?**

இவை பிரச்சாரமாக குறிப்பிட்டவர்களுக்கு நிச்சயமாக அழுத்தத்தைத் தரும். அதேசமயம், தமிழ் மக்களின் பிரச்சினையையும் நடந்தவற்றையும் சர்வதேச கண்களில் வைத்திருக்கும். ஆனால் அவை நேரடியாக மனித உரிமை மன்றத்தினல் கணக்கெடுக் கப்படுவதில்லை.

அதேபோல் தான் கோட்டாபய வரும் நவம்பர் மாதம், அங்கு சர்வதேச மகாநாட்டுக்கு செல்லும்போது எதிர்ப்புகள் தெரிவிக்க புலம்பெயர் தமிழ் மக்கள் ஆயத்தங்கள் செய்கிறார்கள். பிரச்சாரம் என்ற முறையில் அது பிரயோசனம் தரும். அதே சமயம் ஸ்ரீலங்கா அரசின் பிரதிநிதிகள் – கோட்டாவின் தனிப்பட்ட நண்பர்கள் – அரசாங்கத்துக்கு ஆதரவாக நாட்டில் செயற்படும் கட்சிகளின் அங்கத்தினர்கள் – ஏதோ ஒரு விதத்தில் அவருடன் சந்திப்புக்களை ஏற்படுத்தப் பணிகள் மேற்கொள்கிறார்கள். இதுவும் அரசாங்கம் ஏற்படுத்திக் கொள்ள விரும்பும் பிரச்சார யுத்தியே.



2010 இல் பிரிட்டன் ஒக்ஸ்போர்ட் யூனியன் நிகழ்வு ரத்தானபோது மஹிந்தர்......

தனிமனித விருப்பு வெறுப்புகள், பல சமயங்களில் அவர்களின் குணாதிசயங்களைப் பாதித்து, பொது விடயங்களானாலும் அவற்றைப் பற்றி அவர்களின் அணுகுமுறையைப் பாதிக்கிறது.

ஜே.ஆர். ஒரு வினைப் பிடித்த மனிதர். பழிவாங்கும் குணமுள்ளவர். தேனொழுகப் பேசினாலும் நரி என்ற அபிப்பிராயம் பரவலாகவே உண்டு. இதனை இந்திரா காந்தியே பல தடவை அவரோடு கவனமாக இருக்க வேண்டும் என்றும் தெரிவித்தார். ஜே.ஆர். தமிழர்களுக்கு எதிராக எடுத்த நடவடிக்கைகளுக்கும் கலவர



இளம் படை வீரராக கோட்டாபய

காலங்களில் பேசிய பேச்சுக்களுக்கும் அவரை பாதித்த ஒரு சம்பவம் உண்டு.

1976 ஆம் ஆண்டு தேர்தல் காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரித்துப் பேச யாழ்ப்பாணம் முற்றவெளியில் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்துக்கு அவர் வருகை தந்தார். இதற்கு பொதுவாக எதிர்ப்பிருந்தது. ஆனால் கூட்டணியினரோடு ஒரு புரிந்துணர்வு அந்த தேர்தலை ஒட்டி இருந்ததால் அவர்கள் முன்னெடுத்த பகிஷ்கரிப்புக்கள் இருக்கவில்லை. இளைஞர் பேரவை, மாணவர் பேரவையிலிருந்த இளைஞர்களும் அமிர்தலிங்கத்தின் அரவணைப்பிலிருந்தமையால் அவர்களும் வெளிப்படையாக எதுவும் செய்யவில்லை. ஆனால் ஜே.ஆருக்குப் பாடம் தர வேண்டும் என்ற பின்னணிக்கு உதவினார்கள். அமைக்கப்பட்ட மேடையில் சில சப்புக் கட்டுக்குள் வைத்து ஜே.ஆர்.பேசும் பேசும் போது அவை உடைந்து, சரிந்து விட ஏற்பாடுகள் செய்து, அதுவும் சரிந்து, அவமானங்களை அவருக்குத் தந்தது. அதனை அப்பொழுது ஒப்பேற்றியவர்கள் ஈரோஸ் இயக்கத்தினரோடு இயங்கி இளைஞர்கள். அதன்பின் ஜே.ஆர்.யாழ்ப்பாணத்திலேயே "இதற்கு தமிழ் மக்கள் அனுபவிப்பார்கள்" (''They will pay for it") என்று சொன்னமையைக் கேட்டு பகிர்ந்தவர் பலர். அது அவரில் ஊறி, அவரது அணுகுமுறையை பின்னர் வந்த காலங்களிலும் பாதித்தது.

அதேபோல் தான் மஹிந்தாவும் வெளிப்படையாக கோவில் கள், மசூதிகள், தேவாலயங்களுக்குப் போனாலும், நவராத்திரி விழாக்கள் கொண்டாடினாலும், தனக்கு எதிரான பிரசாரங்களினால் அவரது அணுகுமுறை பழிவாங்கலை ஒட்டிப் போவதையே காணலாம்.

கோட்டா அதிலும் மேலான வைராக்கிய சுபாவத்தை வெளிப்படுத்தினாலும், தனது தனிப்பட்ட பாதிப்புக்களினால் பலவாறு பலவிதங்களில் அல்லல்பட்டவர். இவற்றால்தான் துன்புறுத்தப்பட்ட மக்களை, கொல்லப்பட்ட இளைஞர்களை தான் வளர்த்த முதலைகளுக்கு உணவாகத் தந்தார் என்றெல்லாம் சிங்கள ஊடகங்கள் கூட தகவல்கள் எழுதின. அவருக்கும் பின்னணி இருந்தது. யாழ்ப்பாண கோட்டையை விடுதலைப் புலிகளின் கைகளிலிருந்து மீளக்கைப் பற்ற இராணுவத்தினர் இரண்டு இராணுவ அணிகளாக – ஒன்றன் பின்னர் ஒன்று தளபதியான பொன்சேகாவின் தலைமையிலும், மற்றது கோட்டாவின் தலைமையிலும் – நடவடிக்கையில் ஈடுபட்டது. கோட்டாவின் அணி வடமராட்சி முகாமில் இருந்து புறப்பட்டு யாழ்ப்பாணம் வர எத்தனித்ததில் பலத்த தேசத்துக்கு உட்பட்டு அதில் பலர் இறந்ததால் கோட்டா பலத்தமனப் பாதிப்புக்கும், மன அழுத்தத்துக்கும் ஆளானர். அதே நிலைமை பின்னால் ஆனையிறவு யுத்தத்திலும் ஏற்பட்டது. தம்முடைய முழு பிளட்டூன் ஒன்றையே ஒரு சமயம் இழந்தார். இவற்றால்தான் இராணுவத்தில் இருந்து விலகக்கோரி கடிதம் தந்தபோது அவர் பாதிக்கப்பட்டு இராணுவத்தில் தொடர்ந்திருக்கக் கூடிய மனோ நிலையில் இல்லை என்ற காரணங்கள் சொல்லப்பட்டன என்றும் விமர்சனங்கள் கூறப்படுவதுண்டு.

அதற்கு ஆதரவாக அறிக்கைகள் தந்து அவரை இராணுவ சேவையிலிருந்து முன்கூட்டியே விடுவிக்கச் செய்ய உதவியவர் ஜெனரல் சரத்பொன்சேகா என்றும் கூட தெற்கில் பேச்சு உண்டு. அதைத் தொடர்ந்து அவர் சிவில் நிர்வாகத்தில் வேலை செய்தது ராஜா மகேந்திரன் நடத்திய வணிகத் தளங்களில்.


ஆனால், பின்னர் ஜெனரல் பொன்சேகாவையும் சிறை வைத்தார். ராஜா மகேந்திரனின் மரணத்திற்கு எதுவித அனுதாபம் காட்டவுமில்லை. பாதுகாப்புச் செயலாளராக அவர் அமைத்த தனிப்பட்ட படைகளுக்கும் அவற்றின் செயல்களுக்கும் முள்ளிவாய்க்காலுக்கும் அந்த முன்னைய சம்பவங்கள் அவரின் குணாதிசயங்களை வழிப்படுத்துகின்றன.

இவற்றுக்காக, புலம் பெயர் மக்களின் இப்படியான போராட்டங்கள் தவிர்க்கப்பட வேண்டும், செய்யப்படக் கூடாது என்று கருத்தல்ல. இவை ஒவ்வொன்றும் காலகாலமாக பிரச்சினைகளின் பார்வைகளை உந்துகின்றன. அவையும் கணக்கெடுக்கப்பட வேண்டும் என்பதை முன்வைக்கவே குறிப்பிட்டேன்.

இராஜதந்திரம்தான் உலகத்தின் நிதர்சனமான அரசியல்களம். இன மோதல்களிலும் அதற்கான அடிப்படைப் பிரச்சினைகளிலும் முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு அதிகம் பாவிக்க வேண்டியது இராஜதந்திரம்தான்.

ஆனால் தமிழ் மக்கள் தாங்கள் நடத்திய அரசியலால் அல்லது பாராமுகமாக இருந்து வழிவிட்ட அரசியலால் கடந்த 70 வருடங்களில் தங்களது அரசியல் இருப்பு, புவிசார் அரசியலில் தாங்கள் ஏற்படுத்திக்கொள்ள முடிந்த சந்தர்ப்பங்கள் அவர்களது வாழ்வாதாரங்கள், பூர்வீக வாழ்விடங்கள் எல்லாவற்றையுமே கொஞ்சம் கொஞ்சமாக இழந்து, தங்களது இருப்பையே கேள்விக் குறிகளாக்கிறார்கள். எப்படிப்பட்டவர்களுடன் மோதுகிறோம், அவர்களது இயல்பு என்ன என்பவற்றை அறிந்து செயற்படுவதும் கூட சாணக்கியம் தான்.

(வளரும்)



நரித் தந்திரசாலி

# பாடசாலைக்கு செல்லாத ஆசிரியர்களுக்கு நவம்பர் மாதக் கொடுப்பனவு கிடையாதாம்!

## வடமேல் மாகாண ஆளுநர் எச்சரிக்கை

இன்று (வியாழக்கிழமையும்), நாளை (வெள்ளிக்கிழமையும்) பாடசாலைக்கு சமுகமளிக்காத ஆசிரியர் மற்றும் அதிபர்களின் நவம்பர் மாதக் கொடுப்பனவு இடைநிறுத்தப்படும். ஆளுநர் என்ற ரீதியில் கல்வி அமைச்சரின் அதிகாரத்தை செயற்படுத்துவது தொடர்பாகக் கவனம் செலுத்துவேன் என வடமேல் மாகாண ஆளுநர் ராஜா கொள்ளுரே தெரிவித்தார்.

இன்று பாடசாலைக்கு வருகை தராமல் எதிர்வரும் 25ஆம் திகதி பாடசாலைக்கு வருகை தரும் ஆசிரியர் - அதிபர்களை பாடசாலைக்குள் செல்ல அனுமதிக்க முடியாது. அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை முன்னெடுக்கப்படும் எனவும் குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் -

ஆசிரியர் சேவையில் நிலவும் வேதனப் பிரச்சினை, ஆசிரியர் சேவையை ஒன்றிணைந்த சேவையாக்குதல் உள்ளிட்ட காரணிகளை முன்வைத்து ஆசிரியர் - அதிபர் தொழிற்சங்கத்தினர் சுமார் மூன்று மாத காலமாக நிகழ்நிலை முறைமை ஊடாகக் கற்பித்தல் நடவடிக்கைகளில் இருந்து விலகி, தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள்.

ஆசிரியர் - அதிபர் தொழிற்சங்கத்தினர் முன்வைத்துள்ள கோரிக்கைகளை ஏற்றுக் கொள்கிறோம். பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டியது அவசியம். முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்குத் தீர்வு காணும் வகையில் கல்வி அமைச்சு முன்வைத்த அனைத்துத் தீர்வுத் திட்டங்களையும் தொழிற்சங்கத்தினர் புறக்கணித்துள்ளனர்.

வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாக சம்பளத்தை இரு கட்டமாக அதிகரிப்பது தொடர்பில் பிரதமர் முன்வைத்த கோரிக்கைகளையும் தொழிற்சங்கத்தினர் புறக்கணித்துள்ளனர். பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு மாணவர்களுக்குக் கற்பிக்கும் நோக்கம் தொழிற்சங்கத்தினருக்குக் கிடையாது என்பதைத் தெளிவாக விளங்கிக் கொள்ள முடிகிறது. கொவிட் தாக்கத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்வி நிலை ஆசிரியர், அதிபர் தொழிற்சங்கத்தினரது போராட்டத்தின் ஊடாகத் தீவிரமடைந்துள்ளது.

சுகாதாரப் பாதுகாப்பு அறிவுறுத்தல்களுக்கு அமைய 200 இற்கும் குறைவான மாணவர்கள் உள்ள பாடசாலைகளை இன்று முதல் திறக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. போராட்டத்தில் ஈடுபடும் ஆசிரியர் - அதிபர் தொழிற்சங்கத்தினர்கள் இன்றும், நாளையும் பாடசாலைக்கு சமுகமளிக்காமல், எதிர்வரும் 25ஆம் திகதி முதல் பாடசாலைக்கு வருகை தருபோம் எனக் குறிப்பிட்டுள்ளார்கள்.

அரசாங்கத்தின் தீர்மானத்துக்குக் கட்டுப்படும் பொறுப்பு அரச அதிகாரிகளுக்கு உண்டு. ஆகவே இன்று பாடசாலைக்கு சமுகமளிக்காத வடமேல் மாகாண ஆசிரியர் - அதிபர்களின் நவம்பர் மாத கொடுப்பனவு இடைநிறுத்தப்படும்.

ஆளுநர் என்ற ரீதியில் கல்வி அமைச்சரின் அதிகாரங்களைச் செயற்படுத்தும் அதிகாரம் தனக்கு உண்டு. இன்று பாடசாலைக்கு வருகை தராத ஆசிரியர்களின் சம்பளம் தொடர்பில் பரிசீலனை செய்யப்படும். மாணவர்களின் நலனைக் கருத்திற் கொண்டு கடுமையான தீர்மானங்களை எடுக்க நேரிடும்.

ஆசிரியர் - அதிபர்கள் சற்று விட்டுக் கொடுப்புடன் செயற்பட வேண்டும். நாடு தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி, ஏனைய பிரச்சினைகள் தொடர்பாகவும் அதிக கவனம் செலுத்த வேண்டும். கடமைக்கு ஈடுபட்டதன் பின்னர் இரு தரப்பு பேச்சுகள் ஊடாகப் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக் கொள்ள முடியும். - என்றார்.

# குஷிநகர் விமான நிலையத்தை திறந்து வைத்தபின் அமைச்சர் நாமலை சந்தித்தார் இந்தியப் பிரதமர்



இந்தியாவின் உத்தர மாநிலத்தின் குஷிநகரில் அமைக்கப்பட்டுள்ள சர்வதேச விமான நிலையம் நேற்று (புதன்கிழமை) இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியால் திறந்து வைக்கப்பட்டதோடு, நிகழ்வில் கலந்து கொள்வதற்காக விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தலைமையிலான அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் 100 பௌத்த மதகுருமார் அடங்கிய குழுவினர் இந்தியாவிற்கு விஜயம் செய்தனர்.

குஷிநகருக்கான முதலாவது சர்வதேச விமான சேவையை கொழும்பிலிருந்து ஆரம்பிக்கும் வகையில் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தலைமையிலான குழுவினர் நேற்று (புதன்கிழமை) அதிகாலை இலங்கை விமான சேவைக்குச் சொந்தமான விமானத்தில் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து குஷிநகர் விமான நிலையத்தை சென்றடைந்தனர்.

குஷிநகர் விமான நிலையத்தை சென்றடைந்த இலங்கை குழுவினர் இந்திய வெளியுறவுச் செயலாளர் ஹர்ஷ் வர்தன ஶ்ரீலிங்லாவால் வரவேற்கப்பட்டனர். விமான நிலையத்தை திறந்து வைத்ததன் பின்னர் பிரதமர் நரேந்திர மோடி சிறப்புரையாற்றினார்.

குஷிநகர் விமான நிலையத்தை திறந்து வைத்தபின் அமைச்சர் நாமலை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி சந்தித்தார்.

சங்கைக்குரிய மஹாசங்கத்தினரின் ஆசீர்வாதத்துடன் வஸ்கடுவ கபிலவஸ்து புனித சின்னங்கள் சகிதம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பயணம் நேற்று ஆரம்பம். அதற்கமைய கொழும்பிலிருந்து குஷிநகருக்கான விமானத்தின் வருகையுடன் வஸ்கடுவ புனித கபிலவஸ்து சின்னங்களின் கண்காட்சி நேற்று பிற்பகல் ஆரம்பமானது. இதன் போது அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தலைமையிலான குழுவினரை உத்தர மாநில முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் மற்றும் அமைச்சர்கள் பலர் வரவேற்றனர்.

புத்தபெருமான் மஹாபரிநிர்வாண நிலையினை அடைந்த இடமான குஷிநகர் மிகவும் தனித்துவமான ஸ்தானத்தைக் கொண்டுள்ளது. கடந்த ஆண்டு 2020 செப்ரெம்பர் 26 ஆம் திகதி பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடனான மெய்நிகர் இருதரப்பு மாநாட்டின்போது பிரதமர் நரேந்திர மோடி குஷிநகருக்கான முதலாவது சர்வதேச விமான சேவை இலங்கை யாத்திரிகர்கள் குழுவுக்கானதாக அமையவேண்டும் என அறிவித்திருந்தார்.

குஷிநகருக்கான முதலாவது விமானசேவையும் புனித சின்னங்களின் கண்காட்சியும் இந்திய இலங்கை மக்களால் பகிரப்படும் பொதுவான அம்சங்களுக்கு சான்றுபகிர்கின்றனர் என இலங்கையிலுள்ள இந்திய உயர் தூதரகம் தெரிவித்துள்ளது.

# வவுனியா மாவட்டத்தில் 85 பாடசாலைகள் திறப்பு

வவுனியா மாவட்டத்தில் முதல் கட்டமாக 85 பாடசாலைகள் இன்று முதல் மீளத் திறக்கப்படவுள்ளன என மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கு.திலீபன் தெரிவித்துள்ளார்.

பாடசாலைகளை மீளத் திறத்தல் தொடர்பாக இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

கொவிட் அச்சுறுத்தல் காரணமாக மூடப்பட்டுள்ள பாடசாலைகளைக் கட்டம் கட்டமாக மீளத் திறப்பதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

அதனடிப்படையில் 200 இற்குக் குறைவான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள் முதல் கட்டமாக திறக்கப்படவுள்ளன.

அதனடிப்படையில் வவுனியா வடக்கு, வவுனியா தெற்கு வலயங்களுக்கு உட்பட்ட 85 பாடசாலைகள் முதல் கட்டமாகத் திறக்கப்படவுள்ளன.

உரிய சுகாதார முன்னேற்பாடுகளுடன் அவை திறக்கப்படவுள்ளன. குறித்த பாடசாலைகளை மீளத் திறப்பதற்கு அப்பகுதி கிராம அலுவலர், சுகாதாரப் பிரிவினர், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களின் ஒத்துழைப்பையும் வேண்டி நிற்கின்றோம். - எனக் குறிப்பிட்டுள்ளார்.

# தனிமைப்படுத்தல் மீறல் மேலும் 71 பேர் கைது!

**நாட்டில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் கடந்த 24 மணித்தியாலங்களில் 71 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.**

**பொலிஸ் தலைமையகம் நேற்றுக் காலை விடுத்துள்ள செய்தி அறிக்கையில் இதனைத் தெரிவித்துள்ளது.**

**இதற்கமைவாக தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை 81 ஆயிரத்து 311 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.**

**அத்துடன் மேல் மாகாணத்துக்கு உள்நுழையும் மற்றும் வெளியேறும் பிரதேசங்களில் கடந்த செவ்வாய்க்கிழமை மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறிய 345 வாகனங்களில் வந்த 618 பேர் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.**

# சிறுவர் மரண தண்டனையை இரத்து செய்ய திருத்தப்பட்ட சட்டமூலம் இன்று சமர்ப்பிப்பு!

கொழும்பு, ஒக். 21

சிறுவர்களுக்கு மரண தண்டனையை ரத்து செய்வதற்கான திருத்தப்பட்ட சட்டமூலம் இன்று சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இந்தச் சட்டமூலத்தை நீதி அமைச்சர் அலி சப்ரி இன்று (வியாழக்கிழமை) நாடாளுமன்றில் சமர்ப்பிக்கவுள்ளார்.

இதன்மூலம் இளந்தவறாளர்கள் (பயிற்சிப் பாடசாலைகள்) திருத்தச் சட்டமூலத்தின் ஊடாக முதலில் வகுக்கப்பட்டிருந்த 18 என்ற வயதெல்லை 18 - 22 எனத் திருத்தப்படுகிறது. பாலியல் நடுநிலையைப் பேணுவதும் இந்தச் சட்டத்திருத்தத்தின் நோக்கமாகும்.

மேலும் தண்டனைச் சட்டக்கோவையில் மேற்கொள்ளப்படவுள்ள திருத்தத்தின் ஊடாகப் பதினெட்டு வயதுக்கு உட்பட்டவர்களுக்கெதிராக மரண தண்டனை வழங்குவதற்குப் பதிலாக தடுத்து வைத்தல், நிறுவனமொன்றில் தடுத்துவைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளன.

# மாணவர்களின் பாதுகாப்புக்கு அரசே பொறுப்புக் கூற வேண்டும்

## ஆசிரியர் விடுதலை முன்னணி தெரிவிப்பு

**(தலவாக்கலை பி.கேதீஸ்)**

எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் அதிபர்,ஆசிரியர்களின் போராட்டத்தை வேறு வடிவத்தில் முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளோம். பாடசாலைகளை திறப்பதற்கு தீர்மானம் எடுத்த அரசாங்கம் பாடசாலை மாணவர்களின் பாதுகாப்பு தொடர்பாக எந்த விதமான நடவடிக்கையையும் எடுக்கவில்லை. இந்த சிறிய பிள்ளைகளுக்கு ஏதாவது பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகள் ஏற்பட்டால் அரசாங்கமே பொறுப்புக் கூற வேண்டும் என ஆசிரியர் விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் என்.டி. எஸ்.நாதன் தெரிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் பாடசாலைகளை இன்று (வியாழக்கிழமை) திறப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. ஆனால் இன்றும் நாளையும் அதிபர்,ஆசிரியர்களின் போராட்டம் தொடரும். பாடசாலைகளை இன்று முதல் கட்டமாகத் திறப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ள போதும் இன்று 21 ஆம் திகதியும் நாளை 22 ஆம் திகதியும் அதிபர்,ஆசிரியர்கள் கடமைக்கு சமுகமளிக்கப் போவதில்லை என ஒன்றிணைந்த அதிபர்,ஆசிரியர் சங்கங்கள் தீர்மானம் எடுத்துள்ளோம். எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் பாடசாலைகளுக்கு சென்று கற்பித்தலில் ஈடுபடுவதற்கு முடிவு எடுத்துள்ளோம். அந்தவகையில் எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் போராட்டத்தை வேறு வடிவத்தில் முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளோம். பாடசாலைகளைத் திறப்பதற்கு தீர்மானம் எடுத்த அரசாங்கம் பாடசாலை மாணவர்களின் பாதுகாப்புத் தொடர்பாக எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இந்த சிறிய பிள்ளைகளுக்கு ஏதாவது பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகள் ஏற்பட்டால் அரசாங்கமே பொறுப்புக் கூற வேண்டும். நாடளாவிய ரீதியில் அதிபர்,ஆசிரியர்கள் உள்ளிட்ட கல்விசார் ஊழியர்களும் கல்விசாரா ஊழியர்களும் சம்பள முரண்பாடு உள்ளிட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுத் தருமாறு கடந்த 24 வருடங்களாகக் கோரி வருகின்றோம். ஆனால் அதிபர்,ஆசிரியர்களின் போராட்டங்களின் நியாயப்பாடுகளை முழுமையாக விளங்கிக்கொண்டும் அரசு தொடர்ந்து இழுத்தடிப்புச் செய்து வருகின்றது.

இப்பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறு வலியுறுத்தி மூன்று மாதங்களுக்கும் மேலாக தொழிற்சங்க போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றோம். ஆனால், சம்பள முரண்பாட்டுக்கான தீர்வை அரசாங்கம் இதுவரை வழங்கவில்லை. எனவே, எமக்கு நியாயமான தீர்வு கிடைக்கும்வரை நாம் போராடத் தயாராக இருக்கின்றோம். இன்றும் நாளையும் நாங்கள் பணிப்பகிஷ்கரிப்பை நடத்துவோம். எனினும் எதிர்வரும் 25 ஆம் திகதி பாடசாலைக்கு சமுகமளிப்போம். அன்று முதல் மாணவர்களுக்கான கற்பித்தல் நடவடிக்கைகளை முன்னெடுப்போம். காலை 8 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை மட்டுமே எமது பணி இடம்பெறும். மேலதிக கடமைகள் இடம்பெறாது. 2 மணிக்கு பின்னர் பாடசாலைகள் அமைந்துள்ள பிரதேசத்துக்கு அருகில் இருக்கும் நகரங்களில் பெற்றோருடன் இணைந்து அடையாள ஆர்ப்பாட்டங்களை நடத்தவுள்ளோம். அதிபர்,ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டுக்கான தீர்வை அரசாங்கம் வழங்கும் வரை பல்வேறு வடிவில் எமது போராட்டம் தொடரும். - என்றார்.

# விவசாயிகளின் போராட்டங்களின் பின்னணியில் சுதந்திரக் கட்சியாம்

விவசாயிகளால் மேற்கொள்ளப்பட்டு வரும் போராட்டங்களின் பின்னணியில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி இருப்பதாக இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்க குற்றம் சுமத்தியுள்ளார்.

திம்புலாகல பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்றதன் பின்னர் ஊடகவியலாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் -

விவசாயிகளின் போராட்டங்களின் பின்னணியில் சுதந்திரக்கட்சியே செயற்படுகின்றது. தயவு செய்து உடலில் இருந்து கொண்டு காதை சாப்பிடும் செயலை செய்ய வேண்டாம் என கேட்டுக்கொள்கின்றேன்.

சேதன பசளையை பயன்படுத்தி ஒரு போகமேனும் விவசாயம் செய்ய வேண்டும். ஏதேனும் ஒரு காரணத்தால் விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்பட்டால் விவசாயிகளுடன் இணைந்து நானும் வீதியில் இறங்கிப் போராடுவேன்.

விவசாயிகள் ஐம்பது வீதம் சேதனப் பசளையைக் கோருகின்றனர். இதன் மூலம் அரசாங்கத்தினதும், ஜனாதிபதியினதும் சேதன பசளை திட்டம் வெற்றியடைந்துள்ளமை அம்பலமாகின்றது. எனவே ஒன்றிரண்டு போகங்கள் சேதன உரத்தைப் பயன்படுத்தி நெற்செய்கையில் ஈடுபடுமாறு கோருகிறேன் என ரொஷான் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

# கம்பஹாவில் சுற்றி வளைக்கப்பட்ட விடுதி இரு பெண்கள் உட்பட மூன்று பேர் கைது

கம்பஹா மாவட்டம், நீர்கொழும்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கட்டுவ பிரதேசத்தில் விபச்சார விடுதி ஒன்று பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்டுள்ளது.

இதன்போது விபச்சார விடுதியை நிர்வகித்து வந்த நபர் மற்றும் பெண்கள் இருவர் உள்ளடங்களாக மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

தங்கொட்டு, பயகம, மாதம்பே ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 29, 31 மற்றும் 38 வயதுகளையுடைய மூவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களை நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவுள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மீலாதுன் நபி தின தேசிய நிகழ்வு அலரிமாளிகையில் நடைபெற்றது



மீலாதுன் நபி தின தேசிய நிகழ்வு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் அலரிமாளிகையில் இடம்பெற்றது.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது.

தேசிய மீலாதுன் நபி தின விழா 2021ஐ முன்னிட்டு நினைவு முத்திரையும், முதல் நாள் உறையும் தலைமையில் இதன்போது வெளியிடப்பட்டது.

வெகுசன ஊடக அமைச்சர் டலஸ் அழகப்பெரும இந்த நினைவு முத்திரை மற்றும் முதல் நாள் உறையை பிரதமருக்கு வழங்கினார்.

முஹம்மது நபி நாயகம் பிறந்த தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு இதன்போது பிரதமரால் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கிவைக்கப்பட்டன.

நீதி அமைச்சர் அலி சப்ரி இதன்போது பிரதமருக்கு நினைவுப் பரிசொன்றை வழங்கிவைத்தார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் வெகுசன ஊடக அமைச்சர் டலஸ் அழகப்பெரும, நீதி அமைச்சர் எம்.யூ.எம். அலி சப்ரி, தேசிய மரபுரிமைகள், அரங்குக் கலைகள் மற்றும் கிராமியக் கலைகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க, ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம்.முஸம்மில், நாடாளுமன்ற உறுப்பினர்களான காதர் மஸ்தான், மர்ஜான் ஃபலீல், எச்.எச்.எம்.ஹாரிஸ், இஷான் ரஹ்மான், நஸீர் அஹமட், அலி சப்ரி ரஹீம் மற்றும் வெளிநாட்டு தூதுவர்கள் மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் செயலாளர் ஜகத் பீ விஜேவீர, தபால் மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன, முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் இப்ராஹிம் அன்சர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# எழுமாறான கொரோனா பரிசோதனைகளை அதிகரிக்குமாறு சுகாதாரத் தரப்பு கோரிக்கை

எழுமாறாக நடத்தப்படும் கொவிட் பரிசோதனைகள் அதிகரிக்கப்பட வேண்டுமென சுகாதாரத்தரப்பினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சமூகத்தில் கொவிட் தொற்று உறுதியாளர்கள் இருக்கக்கூடும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எழுமாறான அடிப்படையில் பி.சீ.ஆர். மற்றும் அன்டிஜன் பரிசோதனைகள் மேற்கொள்வது மேலும் அதிகரிக்கப்பட வேண்டுமென அரசாங்க மருத்துவ அதிகாரிகள் அமைப்பு அரசாங்கத்திடம் கோரியுள்ளது.

நோய் அறிகுறி தென்படாத நோய் தொற்று உறுதியாளர்கள் சமூகத்தில் இருக்கலாம் எனவும் அவர்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்படவோ அல்லது சிகிச்சை பெற்றுக்கொள்ளவோ கூடிய சாத்தியங்கள் இல்லை எனவும் தெரிவித்துள்ளது.

நாட்டில் கொவிட் தொற்று உறுதியாளர்கள் தொடர்பாகப் புள்ளி விவரங்களை விடவும் மெய்யான எண்ணிக்கை அதிகமாக இருக்கும் எனவும், அதற்குக் குறைவான எண்ணிக்கையில் பரிசோதனைகள் மேற்கொள்வதே காரணம் எனவும் தெரிவித்துள்ளது.

எழுமாறான அடிப்படையில் அன்டிஜன் மற்றும் பி.சீ.ஆர். பரிசோதனை மேற்கொள்வது மிகவும் அவசியமானது எனத் தெரிவித்துள்ளது.

பொதுமக்களும் சுகாதார வழிகாட்டல்களை உரிய முறையில் பின்பற்றுவதில்லை எனவும் சுட்டிக்காட்டியுள்ளது.

# திருமண நிகழ்வில் கலந்துகொண்ட 19 பேருக்கு குளியாப்பிட்டியில் கொவிட்

*குருநாகல் மாவட்டம், குளியாப்பிட்டி பிரதேசத்தில் இடம்பெற்ற திருமண நிகழ்வொன்றில் பங்கேற்ற 35 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 19 பேருக்கு கொவிட் வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.*

*இந்தத் தகவலை குளியாப்பிட்டி பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் தெரிவித்துள்ளது.*

*குளியாப்பிட்டி, கரகஹகெதர பிரதேசத்திலுள்ள மண்டபமொன்றில் இந்தத் திருமண நிகழ்வு இடம்பெற்றுள்ளது.*

*இந்த நிகழ்வில் பங்கேற்ற அனைவரும் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். இதன்போதே 19 பேருக்கு கொவிட் வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.*

*கொவிட் வைரஸ் தொற்று முற்றாக நீங்கிவிட்டது என்று நினைத்து மக்கள் செயற்படுகின்றமையால் மீண்டும் கொவிட் வைரஸ் தொற்றுப் பரவல் அதிகரிக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது என குளியாப்பிட்டி பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி உத்பல சங்கப்ப தெரிவித்துள்ளார்.*

# மாணவர் ஒருவரை மிரட்டி பணம் மற்றும் நகை பறிப்பு

பெற்றோரை வெட்டப் போகிறேன் என மிரட்டி மாணவனிடம் பணம், நகை என்பவற்றை பறித்த, மேற்படி மாணவனின் நண்பர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் கடந்த செவ்வாய்க்கிழமை வட்டுக்கோட்டை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார் எனத் தெரியவருகிறது.

முகநூலில் போலி கணக்கொன்றின் மூலம் உரையாடி பணம், நகை என்பவற்றைத் தருமாறும் அப்படித் தராவிட்டால் மாணவனது பெற்றோரை வெட்டப்போகிறேன் எனவும் அவரது நண்பர் மிரட்டியுள்ளார்.

இதற்கு பயந்த மேற்படி மாணவன், சந்தேகநபர் கேட்ட பணத்தையும், நகையையும் அவர் சொன்ன இடத்துக்கு கொண்டு சென்று வைத்துள்ள நிலையில் பின்னர் சந்தேகநபர் அந்த இடத்துக்கு வந்து அவற்றை எடுத்துச் சென்றுள்ளார்.

இது இவ்வாறு தொடர்ந்து சில நாள்கள் நடைபெற்று வந்துள்ள நிலையில் நகை மற்றும் பணம் தொடர்பில் மாணவனது பெற்றோர் அவரிடம் வினவியுள்ளனர்.

இந்த நிலையில் குறித்த மிரட்டல் சம்பவம் தொடர்பில் மாணவன், பெற்றோரிடம் தெரிவித்தமையையடுத்து வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகளை மேற்கொண்ட வட்டுக்கோட்டைப் பொலிஸார் சந்தேகநபரை கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்துள்ளனர்.

சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் அடிப்படையில் 3 மோதிரங்கள், 3 சங்கிலிகள், 3 வளையல்கள், ஒரு சோடி தோடு மற்றும் 2 லட்சத்து பத்தாயிரம் ரூபா என்பவற்றை வாங்கியதை அவர் ஒப்புக்கொண்டுள்ளார்.

சந்தேகநபர் மேற்படி நகைகளை நிதி நிறுவனத்தில் அடகு வைத்துள்ள நிலையில், அடகு வைத்ததற்காக வழங்கப்பட்டுள்ள ஆவணங்களை சந்தேகநபரிடமிருந்து பொலிஸார் மீட்டுள்ளனர். மேலும் கைது செய்யப்பட்ட மாணவனை மல்லாகம் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் முன்னிலைப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# லசந்த கொலை உள்ளிட்ட பல வழக்கு விசாரணை தொடர்பாக மௌனமாக இருக்க அரசாங்கம் முடிவு!



ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் கொலை மற்றும் ஏனைய சில வழக்குகளின் விசாரணைகள் தொடர்பாக மௌனமாக இருக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

மேற்படி வழக்கு விசாரணைகளில் அரசாங்கம் ஏன் மௌனமாக உள்ளதென ஆங்கில ஊடகமொன்று எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த ஊடகத்துறை அமைச்சர் டலஸ் அழகப்பெரும, விசாரணைகள் மற்றும் நீதிமன்றத்தின் முன் வழக்குகள் அல்லது சட்ட மா அதிபரால் கையாளப்படுவது தொடர்பாக அரசாங்கம் கருத்து தெரிவிக்காது என்று கூறினார்.

ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் கொலை, ஊடகவியலாளர் கீத் நொயார் மீது கடத்தல் மற்றும் தாக்குதல் மற்றும் 11 இளைஞர்கள் கடத்தல் மற்றும் கட்டாய காணாமலாக்கப்பட்டமை தொடர்பான விசாரணைகள் பற்றி அரசாங்கம் பெரும்பாலும் மௌனமாக உள்ளது.

11 இளைஞர்கள் கடத்தல் வழக்கில் கடற்படை அட்மிரல் வசந்த கரன்னகொடவுக்கு எதிரான குற்றச்சாட்டுகளைத் தொடர வேண்டாம் என்று அட்டோனி ஜெனரல் சஞ்சய் ராஜரத்தினம் சமீபத்தில் மேன்முறையீட்டு நீதிமன்றுக்கு அறிவித்திருந்தார்.

இந்தச் சம்பவங்கள் நீதிமன்றத்துக்கு முன்பாகவோ அல்லது அட்ரோனி ஜெனரலால் கையாளப்படும்போதோ, அரசு அதில் ஈடுபடுவது நெறிமுறை அல்ல என்றும் அழகப்பெரும கூறினார்.

வழக்குகள் தொடர்பாக பல்வேறு கருத்துகள் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன எனவும், அந்த கருத்துக்கள் நாட்டில் ஜனநாயகத்தை வலுப்படுத்தும் என்றும் அவர் கூறினார்.

எனினும், நீதிமன்றத்தில் இருக்கும் வழக்குகள் தொடர்பாகஅரசு எந்த அறிக்கையும் அளிக்காது எனத் தெரிவித்தார்.

# பிழையான ஆலோசனையின் அடிப்படையில் வர்த்தமானி

## விவசாய அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

இரசாயன உரத்துக்குத் தடை விதிக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் பிழையான ஆலோசனைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டதாக விவசாய அமைச்சின் செயலாளர் பேராசிரியர் உதித் கே ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பில் ஜனாதிபதி, துறைசார் அமைச்சர் அல்லது அரசாங்கம் பொறுப்பு சொல்ல வேண்டியதில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

மாறாக உயர் அரசியல் தலைவர்களுக்கு ஆலோசனை வழங்கியவர்களே பிழையான வழிகாட்டல்களை மேற்கொண்டுள்ளனர். ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்தைத் தயாரிப்பதற்கு நாமும் பங்களிப்பு செய்துள்ளோம்.

விசமற்ற தரமான உர வகைகளை அறிமுகம் செய்ய வேண்டும் என்பதே ஜனாதிபதியின் இலக்காகக் காணப்பட்டது. இரசாயன உர பயன்பாட்டைத் தடை செய்யும் வர்த்தமானி அறிவித்தலுக்கு பதிலீடாக சுற்றுச் சூழலுக்கு பாதிப்பு ஏற்படாத உர வகைகளை இறக்குமதி செய்ய அனுமதி அளிக்கப்பட்டிருக்க வேண்டும்.

தற்போதைய நிலைமை தொடர்பாக ஜனாதிபதி, அமைச்சர்கள் மற்றும் ஆய்வாளர்கள் பேச்சு நடத்தியுள்ளனர். தற்போதைய பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டுமென அங்கு பேசப்பட்டது. தேவையற்ற விசம் கலந்த உர வகைகளை விடவும் தரம் கூடிய சேதனப் பசளைகளை பயன்படுத்த வேண்டும் என சுட்டிக்காட்டியுள்ளார்.



# மாகாணங்களுக்கு இடையிலான பயணத் தடை ஒக். 31 வரை நீடிப்பு



## கொரோனாத் தடுப்புச் செயலணி அறிவிப்பு

**இலங்கையில் மாகாணங்களுக்கு இடையிலான பயணக் கட்டுப்பாட்டை மேலும் 10 நாள்களுக்கு நீடிப்பதற்குக் கொரோனாத் தடுப்புச் செயலணி தீர்மானித்துள்ளது.**

**இதன்படி ஒக்ரோபர் 31 ஆம் திகதி வரையில் மாகாணங்களுக்கு இடையிலான பயணக் கட்டுப்பாடு தொடரும் என்று கொரோனாத் தடுப்புச் செயலணியின் பிரதானியும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா நேற்று அறிவித்துள்ளார்.**

நாட்டில் கொரோனாத் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தும் வகையில், கடந்த ஓகஸ்ட் 21ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்பட்டிருந்த தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் ஒக்ரோபர் முதலாம் திகதியுடன் தளர்த்தப்பட்டது.

எனினும், தொற்று அச்சுறுத்தல் தொடர்வதால், மாகாணங்களுக்கு இடையிலான பயணக் கட்டுப்பாட்டை ஒக்ரோபர் 21ஆம் திகதி வரையில் தொடர்வதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

எனினும், தற்போதைய நிலைமையைக் கருத்தில்கொண்டு அதனை இம்மாத இறுதி வரையில் நீடிப்பதற்குக் கொரோனாத் தடுப்பு செயலணி தீர்மானித்துள்ளது.

## யாழ். மாநகர சபையின் செயற்பாடுகள் விரைவில் கணினி மயப்படுத்தப்படும்

### மேயர் மணிவண்ணன் நம்பிக்கை



(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம் மாநகர சபையின் செயற்பாடுகள் அனைத்தும் விரைவில் கணினி மயப்படுத்தப்படும் என்று யாழ். மாநகர சபை மேயர் சட்டத்தரணி வி. மணிவண்ணன் தெரிவித்தார்.

யாழ் மாநகர சபையின் உத்தியோகபூர்வ இணையத்தள அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது நாம் கணினி உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். அந்த வகையிலேயே யாழ். மாநகர சபையின் செயற்பாடுகளை முற்றுமுழுதாக இணையவழி மூலம் கணணி மயப்படுத்த வேண்டும் என்பது என்னுடைய இலக்கு.

அந்த இலக்கை நோக்கிய பயணத்தின் மிகக்காத்திரமான பணியின் ஒரு பகுதியை இன்று நாங்கள் அடைந்துள்ளோம். அத்துடன் எதிர்காலத்தில் யாழ். மாநகர சபையின் செயற்பாடுகள் அனைத்தும் இலத்திரனியல் மயப்படுத்தப்பட்டு இணையத்தின் ஊடாக பொதுமக்கள் தமது சேவையை வீட்டில் இருந்தே பெற்றுக்கொள்ளக்கூடியவாறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும். அதற்குரிய வேலைத்திட்டங்கள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள இணையத்தளமானது பொதுமக்கள் தமக்குரிய சேவைகளை வீடுகளில் இருந்தவாறே இணையத்தினூடாக முறையாகப் பெற்றுக்கொள்ள கூடிய வாறாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனவே, தமது பதவிக் காலம் விரைவில் முடிந்து விட்டாலும் எதிர்வரும் காலத்தில் இந்த மாநகர சபையைப் பொறுப்பேற்கும் நிர்வாகமானது முழுமையாக இணையமயமாக்கப்பட்ட மாநகர சபையாகப் பொறுப்பேற்கும் - என்றார்.

---

**மரணம் 18...**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உயிரிழந்தவர்களில் 11 ஆண்களும், 07 பெண்களும் அடங்குகின்றனர்.

இதன்படி நாட்டில் இதுவரையில் கொரோனாத் தொற்றால் மரணித்தோரின் மொத்த எண்ணிக்கை 13 ஆயிரத்து 543 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, இலங்கையில் நேற்று 537 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 33 ஆயிரத்து 303 ஆக எகிறியுள்ளது.

அத்துடன் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 360 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

அதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 93 ஆயிரத்து 674 ஆக அதிகரித்துள்ளது.

## வடமராட்சி கிழக்கில் பொலிஸாருடன் இணைந்தே சட்டவிரோத மணல் அகழ்வு

### சுமந்திரன் எம்.பி. பகீர் குற்றச்சாட்டு

(இ.கலையமுதன், ந.லோகதயாளன்)

வடமராட்சி கிழக்கில் பொலிஸாருடன் இணைந்தே சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெற்று வருகின்றது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் குற்றஞ்சாட்டினார்.

மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெறும் இடங்களுக்கு நேற்று நேரடியாகச் சென்று பார்வையிட்ட பின்னர் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நீண்ட நாள்களாக சட்டவிரோதமான மணல் கொள்ளை இந்தப் பகுதிகளில் இடம்பெற்று வருகின்றது. குறிப்பாக நான் ஒரு முறை எனது வாகனத்தில் வரும் போது கடத்தல்காரர்கள் என்னைக் கண்டதும் தமது வாகனத்தை திருப்பிக் கொண்டு சென்றதை நேரடியாகக் கண்டேன்.

அதேபோல் இப்பகுதி மக்கள் மிகவும் அச்சம் அடைந்துள்ளார்கள். அதாவது சட்டவிரோத மணல் அகழ்வு தனியார் காணிகளில் இடம்பெற்று வருகின்றது.

சட்டவிரோதமாக மணல் அகழ்வு தொடர்பில் பொலிஸாரிடம் தகவல் வழங்கும்போது அவர்கள் நடவடிக்கை எடுப்பதாகக் கூறுகிறார்கள். ஆனால், அவ்வாறு முறையிடும்போது மணல் கடத்தல்காரர்களிடமிருந்து பொலிஸாரிடம் முறையிட்டவர்களுக்கு தொலைபேசி அழைப்பு வருகின்றது. எனவே, பொலிஸாருடன் இணைந்து இந்தச் சட்டவிரோத மணல் கொள்ளை ஈடுபடுவது என்பது நிரூபணமாகின்றது.

எனவே, குறித்த விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார்.

---

**மஹிந்தவுடன்...**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை அலரி மாளிகையில் சந்தித்தார்.

எதிர்வரும் ஆண்டுகளில் இலங்கை மற்றும் வியட்நாம் இடையே இருதரப்பு உறவை மேம்படுத்துவதற்கு அதிக வாய்ப்புள்ளது எனத் தூதுவர் ஹோ தீ தான் ட்ருக் இதன்போது நம்பிக்கை வெளியிட்டார்.

வியட்நாமிலிருந்து இலங்கைக்கு முதலீடுகளைப் பெற்றுக்கொள்வதற்கு அதிக வாய்ப்புள்ளது எனத் தெரிவித்த தூதுவர், 2019ஆம் ஆண்டு இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகம் 300 மில்லியன் அமெரிக்க டொலர்களைத் தாண்டியது எனவும் சுட்டிக்காட்டினார்.

முதலீடுகளுக்கு மேலதிகமாக இலங்கை மற்றும் வியட்நாம் இடையிலான பௌத்த உறவை மேம்படுத்துவதற்கு தமது நாடு ஆர்வத்துடன் காணப்படுகின்றது எனவும் தூதுவர் இதன்போது வலியுறுத்தினார்.

இதற்கு உடன்பாடு தெரிவித்த பிரதமர், வரலாற்றுச் சிறப்புமிக்க பௌத்த உரிமையை அடிப்படையாகக் கொண்டு இரு நாட்டு மக்களுக்கும் முக்கியமான வகையில் பரஸ்பர உறவை உறுதிப்படுத்த முடியும் எனச் சுட்டிக்காட்டினார்.

வியட்நாம் பௌத்தவிகாரையொன்றை இலங்கையில் நிறுவுதல் மற்றும் இரு நாட்டு மதத் தலைவர்கள் மற்றும் மாணவர்கள் இடையே கல்வி பரிமாற்ற நிகழ்ச்சித் திட்டமொன்றை முன்னெடுத்துச் செல்வது குறித்தும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

சுமார் நூறு வியட்நாம் பௌத்த பிக்குமார் இதுவரை இலங்கையில் கல்வி பயின்று வருகின்றனர்.

நாடாளுமன்ற உறவை மேம்படுத்தல் தொடர்பிலும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டதுடன், இருநாடுகளுக்கும் இடையே தற்போது காணப்படும் ஒத்துழைப்பு வேலைத்திட்டங்களை தொடர்ச்சியாக முன்னெடுத்து செல்வது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

இலங்கைக்கான வியட்நாம் தூதுவராக ஹோ தீ தான் ட்ருக் கடந்த மார்ச் மாதம் முதல் சேவையாற்றி வருகின்றார்.

---

**இந்திய மீனவர்...**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பார்வையிட்ட பின்னர் உடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டது.

அவ்வாறு ஒப்படைக்கப்பட்ட உடல் உடல்கூற்றுப் பரிசோதனையில் நீரில் மூழ்கியதால் மரணம் என அறிக்கையிடப்பட்டுள்ளது.

இதையடுத்து இந்திய மீனவரின் உடல் இன்று கடல் மார்க்கமாக இந்தியாவுக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.